1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவு சார் பதிவாளர் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவிலே சங்கத்தின் பொதுக் குழுவைக் கூட்டவும், புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதில் வரவேற்கத் தக்கது. ஆனால் இப்போது செய்ய வேண்டிய ஒரு அவசர காரியம் இருக்கிறது. இன்னும் அந்த நீக்கப்பட்ட நபர் கையிலேதான் ஆபீஸ் நிர்வாகம் இருக்கிறது. எனவே, சார் பதிவாளரிடம் உடனடியாக நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, டெபுடி ரெஜிஸ்டிரார் (ஹவுசிங்) அவர்கள் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகள் குறித்து கூட்டுறவுத் துறைப் பதிவாளருக்கு பதில் வந்தவுடன், அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள், நிர்வாகத்திலே உள்ள குறைபாடு காரணமாக செயல்படாமல் பல இடங்களில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களில், முன்பு இருந்ததுபோல், டி. ஆர். கேடரில் செக்கரட்டரி ஒருவரை நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பல சங்கங்களில் அரசு அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள். எனவே, எந்த சங்கத்திலாவது செயலர் நியமிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்டால், அரசு அது குறித்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும்.

தாம்பரத்தில் சுங்கத் தீர்வை இயக்க மண்டலத்திற்கு
தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வீடுகள்.

109—(*வினா எண் *9005*) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் அமைய உள்ள சுங்க தீர்வை இயக்க மண்டலத்திற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் எத்தனை ?

(ஆ) அதனுடைய திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 390 வீடுகள்.

(ஆ) ரூ. 417.97 இலட்சம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வையற்ற மண்டல நிர்வாகத்தின் டெபாசிட் ஓர்க்கா அல்லது 'ஹட்கோ' மூலமாக டெபாசிட் செய்யப்படும் ஓர்க்கா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'ஹட்கோ' மூலமாக வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிற திட்டங்கள்தான் நான் சொன்ன திட்டங்கள்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வையற்ற ஏற்றுமதி மண்டலத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கா அல்லது உயர் அதிகாரிகளுக்கா ? இல்லையெனில் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் அந்தத் திடடத்தில் உள்ள வீடுகளை அரசு ஒதுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே, தாம்பரம் பகுதியில் பொதுமக்களுக்கு தனியாக பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டம், சுங்கத் தீர்வை இல்லாத வணிக மண்டலத்தில் உள்ள, அதாவது இப்போது அமைந்துள்ள Free Trade Zone-ல் உள்ள தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் அனைவருக்கும் வழங்கப்பட கட்டப்படும் திட்டமாகும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

110—(*வினா எண் 9076) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின் கீழ் பயனடைந்த ஊர்கள் யாவை ?

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ் சின்னசேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய ஊர்கள் பயனடைந்துள்ளன.

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை 90.